1978 மார்ச் 9]

(முற்பகல் 10-10)

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஸ்ரீராம் பாப்புலர் பஸ் கம்பெனியில் பணி புரிந்த 104 தொழிலாளர்கள், அந்த பஸ் கம்பெனி 11 வழித் தடங்களை சரணடர் செய்த காரணத்தினால், இன்றைக்குத் தெருவிலே நிற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி அமைச்சருக்குப் பலமுறை முறையீடுகள் செய்த பொழுது பரிசீலிக்கப்படும் என்ற விடையைச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது வேறு மாதிரி பதில் சொல்கிறார்கள். ஆகவே, இந்த வழித் தடங்களை அரசு எடுக்கும்போது, அந்தத் தனியார் பஸ்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களை எடுத்துக் கொள்வதில் அரசினுடைய கொள்கைதான் என்ன என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வாகன சட்டம், சாப்டர் 4, மற்றும் 4-ஏ-ன் கீழ் தனியார் பேருந்துகளை நாட்டுடைமையாக்குகிற பொழுது, அதனால் வேலை இழக்கின்ற பணியாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற விதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து வருகிறோம்—நடைமுறைப் படுத்தி வருகிறோம். ஆனால் ஸ்ரீராம் கம்பெனியைப் பொறுத்த வரையில், 10 உரிமங்களுக்கு மேல் வைத்திருக்கிற தனியார் பேருந்துகளை அவர்கள் ஒப்படைத்து விட வேண்டுமென்ற நடைமுறையை எதிர்த்து, உயர் நீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிற காரணத்தால், அந்த வழக்கு முற்றுப் பெறாத காரணத்தால், அந்தப் பணியாளர்களுக்கு வேலை கிடைக்க வழியில்லாமலிருக்கிறது. 35 உரிமங்களில், 11 உரிமங்களை அவர்கள் தாங்களாகவே நிறுத்தி விட்டார்கள். அந்த உரிமங்களின் பேருந்துகளை அவர்கள், அரசிடம் ஒப்படைக்கவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடுவன்குடி அருகிலுள்ள மதகினை சீர் செய்தல்.

*478 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், பட்டவர்த்தி பஞ்சாயத்தில், கடுவங்குடி பகுதி அரசலாறு நெடுஞ்சாலையிலுள்ள மதகினை சீர் செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லை. இப்பாலத்தின் அணுகு சாலை ரூ. 10,500 செலவில் அண்மையில் மேம்பாடு செய்யப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியம், பட்டவர்த்தி பஞ்சாயத்திலுள்ள அரசினர் நெடுஞ்சாலை, நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டு, ஏறத்தாழ 5, 6 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையில் எந்தவிதமான மேம்பாடும் செய்யப்படவில்லை. அந்தப் பாலத்திற்கு, மதகுக்கு மட்டுமல்லாமல், அந்தச் சாலை கூட சீர் செய்யப்பட வில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் எந்த மதகினை அல்லது பாலத்தைக் குறிப்பிடுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இன்னும் அந்தப் பாலததைச் சீர்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட பாலம், பட்டவர்த்தி-குறிச்சி சாலையில் கி.மீ. 4/6-ல் அமைந்துள்ளது. இது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில்தான் உள்ளது. இப் பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லையென்று தலைமைப் பொறியாளர் கருத்து தெரிவித்துள்ளார். 15 செ.மீ. கனத்திற்குச் சரளையிட்டும், சாலையோரத்தை அகலப் படுத்தி மண் வேலை செய்யவும், ரூ. 10,500 செலவில் மதிப்பிடப்பட்டு, அண்மையில் வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. இன்னும் வேறு குறைபாடுகள் இருக்குமானால் உறுப்பினர் அந்தக் குறிப்புகளைக் கொடுப்பார்களானால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

சிதம்பரம் வட்டத்தில் தானே இயங்கும் நீர் ஊற்றுகள்.

*479 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில், தானே இயங்கும் நீர் ஊற்றுகள் (ஆர்டிஷன்) எத்தனை போடப்பட்டன ?

(ஆ) அவற்றுள் தற்போது எத்தனை இயங்கி வருகின்றன?

(இ) மேற்கொண்டும் போட உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 133.

(ஆ) 91.
(இ) ஆம்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இன்று இந்த ஆர்ட்டீசன் பைப், தீவிர சாகுபடி திட்டத்தின் கீழே ஆரம்பிக்கப்பட்டது. சிதம்பரம் வட்டத்திலே 25 ஊர்களுக்கு மேலாக 50 நீரூற்றுகள் வேலை செய்து வந்தன. ஆனால் இன்று அத்தனையும்